**(Sample 1)**

# மாதிரி வினாத்தாள் (MODEL QUESTION PAPER)

# பகுதி II - பொதுத் தமிழ் (PART II - TAMIL)

| | | | |
|---|---|---|---|
| வகுப்பு | : XI | மதிப்பெண் | : 80 |
| பதிவு எண் | : | நேரம் | : 2 ½ மணி |
| பெயர் | : | சிந்தனை நேரம் | : 1/4 மணி |

## General Instructions to Candidates

1. There is a 'Cool off time' of 15 minutes in addition to the writing time 2½ hrs.
2. You are neither allowed to write your answers nor to discuss anything with others during the 'Cool off time'.
3. Use the 'Cool off time' to get familiar with questions and to plan your answers.
4. Read questions carefully before answering.
5. All questions are compulsory and only internal choice is allowed.

## பொது வழிமுறைகள்

1. விடை எழுதத் தந்துள்ள 2½ மணி நேரத்திற்கு மேலாகத் தொடக்கத்தில் 15 நிமிடங்கள் சிந்தனை நேரமாகத் (Cool off time) தரப்பட்டுள்ளது. இந்நேரத்தில் விடை எழுதவோ விவாதிக்கவோ கூடாது.
2. இந்நேரத்தை வினாக்களைப் படித்துப் புரிந்துகொள்ளவும் விடையைத் திட்டமிடவும் பயன்படுத்த வேண்டும்.
3. விடை எழுதும் முன்பு வினாக்களைக் கவனமாகப் படிக்கவும்.
4. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதவேண்டும்.
5. சில வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி விடை எழுதுக.

## 1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக

10 X 1 = 10

1. பண்பாட்டைக் காட்டும் காலக் கண்ணாடி

அ) விழாக்கள் ஆ) கோவில்கள்

இ) கலைகள் ஈ) இலக்கியங்கள்

2. ஞானிகட்கு உரியதும் பிறர்க்கு அரியதும்

அ) அறிவுநிலை ஆ) ஆய்வுநிலை

இ) சமநிலை ஈ) சமயநிலை

3. இலக்கியத்தின் உயிர்

அ) கருத்து ஆ) உணர்ச்சி

இ) கற்பனை ஈ) வடிவம்

4. வினைத்தொகையைக் குறிப்பது

அ) வீசுமணம் ஆ) காசுபணம்

இ) தேசுபுவி ஈ) ஆசுகவி

5. இயல்பான நிகழ்ச்சியின் மீது, கவிஞன் தன் கருத்தைப் புகுத்துவது

அ) இயல்பு நவிற்சி அணி ஆ) பிறிது மொழிதல் அணி

இ) தற்குறிப்பேற்றணி ஈ) உயர்வு நவிற்சி அணி

6. எட்டாவது பிறவி என்னும் நூலின் ஆசிரியர்

அ) சல்மா ஆ) திலக பாமா

இ) வெண்ணிலா ஈ) தமிழச்சி

7. தமக்குப் பின்வந்தவர்களுக்குக் கலங்கரை விளக்கமாய் இலங்கியவர் என்று ஆயிஷா பேகத்தால் சுட்டப்படுபவர்

அ) திரிகூடராசப்பக் கவிராயர் ஆ) திருநாவுக்கரசர்

இ) திருஞானசம்பந்தர் ஈ) திருத்தக்கத்தேவர்

8. இறைவனது ஆடையாகக் கெதெ என்னும் கவிஞரால் குறிப்பிடப்படுவது

அ) கடல் ஆ) நிலம்

இ) வானம் ஈ) இயற்கை

9. 'கடைத்தெருக் கதைகள்' என்னும் தொகுப்பின் ஆசிரியர்

அ) பொன்னீலன் ஆ) ஆ.மாதவன்

இ) நாஞ்சில் நாடன் ஈ) சுந்தர ராமசாமி

10. நாதசுரத்துக்கு அசையும் பாதசரம் - இத்தொடரில் நாதசுரம் என்பது

அ) நதி ஆ) காற்று

இ) அலை ஈ) மேகம்

## 11 முதல் 14 வரையுள்ளவற்றைச் சரியாகப் பொருத்துக

4 X 1 = 4

| | | |
|---|---|---|
| 11. மகாத்மா காந்தி | - | இதுவரை நான் |
| 12. டி. கே. ஷண்முகம் | - | வனவாசம் |
| 13. வைரமுத்து | - | சத்திய சோதனை |
| 14. கண்ணதாசன் | - | எனது நாடக வாழ்க்கை |

### 15 முதல் 18 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று கருத்துகள் அமையும்படி விடை எழுதுக

**4 X 3 = 12**

15. பழங்கலைகளைப் பாதுகாக்கவேண்டுவதன் தேவையைப் பட்டியலிட்டு விளக்குக.
16. உங்கள் ஊரில் நடைபெறும் ஏதேனும் விழா குறித்து விளக்கக் குறிப்பு எழுதுக.
17. நவீனத்துவக் கோட்பாடு, இலக்கியத்தில் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதற்கான காரணங்கள் யாவை?
18. நீவிர் சுற்றுலாச் சென்றபோது கண்ட இயற்கைக் காட்சிகளை ஒரு வருணனையாக்குக.

### 19 முதல் 23 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு கருத்துகள் அமையும்படி விடை எழுதுக.

**5 X 4 = 20**

19. நும் பாடப்பகுதியிலுள்ள மருமக்கள்வழி மான்மியம் கவிதையை விமர்சனம் செய்து குறிப்பு வரைக.
20. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்னும் நன்னூல் நூற்பா இன்றைய மொழிநிலையில் ஆதிக்கம் செலுத்தும் முறையை எடுத்துக்காட்டுகளுடன் நிறுவுக.
21. நவீனத்துவம் முன்வைக்கும் கருத்துநிலைகளைப் பற்றி வானொலி உரை ஒன்று தயாரிக்க.
22. 'இயற்கை நலனே மனித நலன்' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை தயார் செய்க.
23. நீவிர் சென்றுவந்த ஏதேனும் பயண அனுபவத்தைச் சுவைபட எழுதுக.

### 24, 25 வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் ஐந்து கருத்துகள் அமையும்படி விடை எழுதுக

**2 X 5 = 10**

24. தமிழிலக்கியத்தில் காணலாகும் வீரச்சுவையைச் சான்றுகளுடன் புலப்படுத்துக
25. சி.வை.தாமோதரம் பிள்ளையின் பணிகள் பன்முகத் தன்மை கொண்டவை என்பதைத் தக்க சான்றுகள் தந்து நிறுவுக.

### 26 முதல் 28 வரையிலான வினாக்களுக்கு, இரு பக்கங்களுக்குக் குறையாமல் கட்டுரை வடிவில் விடை தருக.

**3 X 8 = 24**

26. பண்பாட்டுத்துறை சார்பாக நடைபெறும் கருத்தரங்கில் பங்கேற்கப் 'பண்பாட்டின் பிரதிபலிப்பே கலைகள்' என்னும் தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை ஒன்று தயார் செய்க.

அல்லது

'கலைகளின் வளர்ச்சியில் ஊடகங்களின் பங்களிப்பு' என்னும் தலைப்பில் சொற்பொழிவு உரைக் குறிப்பு ஒன்று தயார் செய்க.

27. மாத இதழ் ஒன்றில் கீழ்க்காணும் தகவல்கள் அடங்கிய விளம்பரம் ஒன்றைப் பார்க்கிறீர்கள்.

**மாணவர் கட்டுரைப் போட்டி**

| | | | |
|---|---|---|---|
| வகுப்பு | : 11 | தலைப்பு | : கலைகளில் சிறந்தது இலக்கியம் |
| அளவு | : 200 சொற்கள் | முதல் பரிசு | : ரூ. 1000/- |
| கடைசி நாள் | : ................................ | | |

இதன் அடிப்படையில் கட்டுரை ஒன்று தயாரிக்கவும்.

அல்லது

'வாழ்க்கைப் பிரச்சினைகளை அலசுவதில் பெரும்பங்கு வகிப்பது பண்டைய இலக்கியங்களே! தற்கால இலக்கியங்களே!' என்னும் தலைப்பில் நடைபெறவிருக்கும் பட்டிமன்றத்தில் ஏதேனும் ஓர் அணியில் பேசுவதற்கான கருத்துகளைத் தொகுக்கவும்.

28. இயற்கைப் பாதுகாப்பு என்னும் தலைப்பில் கட்டுரை எழுத இயற்கை நலம்விரும்பி ஒருவரை நேர் காண்பதற்குத் தேவையான எட்டு வினாக்கள் தயார் செய்க.

அல்லது

இயற்கைச் சீரழிவைச் சுட்டிக்காட்டி, 'இயற்கையின் கண்ணீர்' என்னும் தலைப்பில் பத்திரிக்கைத் தலையங்கம் ஒன்று எழுதுக.

◆ ◆ ◆

# பொதுத்தமிழ் - மாதிரி வினாத்தாள் - I
# மதிப்பீட்டுக் குறிப்புகள்

| வினா என் | விடைக் குறிப்புகள் | மதிப் பெண் | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | ஈ. இலக்கியங்கள் | 1 | 1 |
| 2 | இ. சமநிலை | 1 | 1 |
| 3 | அ. கருத்து | 1 | 1 |
| 4 | அ. வீசுமணம் | 1 | 1 |
| 5 | இ.தற்குறிப்பேற்றணி | 1 | 1 |
| 6 | ஆ. திலகபாமா | 1 | 1 |
| 7 | ஈ. திருத்தக்கத்தேவர் | 1 | 1 |
| 8 | ஈ. இயற்கை | 1 | 1 |
| 9 | ஆ. ஆ.மாதவன் | 1 | 1 |
| 10 | ஆ. காற்று | 1 | 1 |
| 11 | மகாத்மா காந்தி - சத்தியசோதனை | 1 | 1 |
| 12 | டி.கே. சண்முகம் - எனது நாடக வாழ்க்கை | 1 | 1 |
| 13 | வைரமுத்து - இதுவரை நான் | 1 | 1 |
| 14 | கண்ணதாசன் - வனவாசம் | 1 | 1 |
| 15 | • பழங்கலைகள் பண்பாட்டின் வெளிப்பாடுகள்<br>• சமூக விழுமியங்களை எடுத்தியம்புகின்றன<br>• கலைகள் பாதுகாக்கப்படவேண்டியவை | 1<br>1<br>1 | 3 |
| 16 | • விழா/விழாநடக்கும் காலம்<br>• பங்குபெறுவோர்<br>• நடத்துமுறை | 1<br>1<br>1 | 3 |
| 17 | • பொதுவான மாற்றம் நிகழ்தல்<br>• இலக்கிய மாற்றம் தேவை<br>• இசங்கள் அடிப்படையில் சமூகப் பிரச்சினை | 1<br>1<br>1 | 3 |
| 18 | • சுற்றுலா சென்ற இடம்<br>• கண்ட காட்சிகள்<br>• வர்ணித்தல் | 1<br>1<br>1 | 3 |
| 19 | • தலைப்பு விளக்கம்<br>• தாயமுறை<br>• சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டும் விதம்<br>• அங்கதச்சுவை | 1<br>1<br>1<br>1 | 4 |
| 20 | • பொருள்<br>• வழக்கிழந்துபோன பழைய சொற்கள்<br>• இன்றைய பேச்சு, எழுத்து முறை<br>• பிறமொழிச் சொற்களின் கலப்பு / தாக்கம் - எடுத்துக்காட்டு | 1<br>1<br>1<br>1 | 4 |
| 21 | • சுதந்திரமானது/ தராளத்துவம்<br>• பழமைக்கு எதிர்ப்பு/சமகாலப் பிரச்சினைகள்<br>• வானொலி உரை அமைப்பு<br>• மொழிநடை | 1<br>1<br>1<br>1 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 22 | • உள்ளடக்கம்<br>- இயற்கை முக்கியத்துவம்<br>- மனித வாழ்க்கையில் இயற்கையின் பங்களிப்பு<br>- இயற்கைச் சீரழிவால் ஏற்படும் தீமைகள்<br>• எடுத்துரைக்கும் பாங்கு | 3<br><br><br><br>1 | <br><br><br><br>4 |
| 23 | • சென்ற இடமும்/ கண்ட காட்சிகளும்<br>• உள்ளத்தைக் கவர்ந்த அனுபவங்கள்<br>• காலாச்சாரச் செய்திகள்<br>• எடுத்துரைக்கும் திறன்/ மொழிநடை | 1<br>1<br>1<br>1 | <br><br><br>4 |
| 24 | • வீரச்சுவை - விளக்கம்<br>• எடுத்துக்காட்டுப் பாடல்கள்<br>- புறநானூறு<br>- கலிங்கத்துப் பரணி<br>- மனோன்மணியம்<br>- பாரதம் | 1<br>4 | <br><br><br><br><br>5 |
| 25 | • பள்ளி ஆசிரியர்<br>• பத்திரிகைத் துணை ஆசிரியர்<br>• இதழாசிரியர்<br>• கல்லூரித் தமிழாசிரியர்<br>• பழைய நூல்களின் பதிப்பாசிரியர் | 1<br>1<br>1<br>1<br>1 | <br><br><br><br>5 |
| 26 | • உள்ளடக்கம்<br>- பண்பாட்டு விளக்கம்<br>- இலக்கியங்களில் பண்பாட்டுச் செய்திகள்<br>- கலைகள் பண்பாட்டுடன் தொடர்புடையவை<br>- கலைகளின் சமூக வெளிப்பாடு<br>• மேற்கோள்கள்<br>• எடுத்துரைக்கும் திறன்<br>• கட்டுரை வடிவம்<br>• மொழிநடை<br>அல்லது<br>• சமூகத்தில் காட்சி ஊடகங்களின் தாக்கம் அளவிட முடியாது<br>• ஊடகங்கள் பழைய கலைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன<br>• ஊடகங்கள் புதிய கலைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன<br>• கண்டு கேட்டறியாத கலைகள் பலவும் ஊடகங்களில் காணமுடிகிறது<br>• கலைகளின் வளர்ச்சியில் ஊடகங்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது<br>• அமைப்பு/ வடிவம்<br>• மொழிநடை<br>• வெளியீட்டுத் திறன் | 4<br><br><br><br><br>1<br>1<br>1<br>1<br><br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1 | <br><br><br><br><br><br><br><br>8<br><br><br><br><br><br><br><br><br>8 |
| 27 | • பல்வேறு கலைகள்<br>• இலக்கியக் கலையின் தனித்தன்மையும் சிறப்பும்<br>• எடுத்துக்காட்டுகள்<br>• இலக்கியம் பற்றிய மேற்கோள்கள்<br>• எடுத்துரைக்கும் திறன்<br>• கருத்துக்கோர்வை<br>• வடிவம்<br>• மொழிநடை<br>அல்லது<br>• பண்டைய இலக்கியங்கள்<br>- அன்பு<br>- அறம்<br>- பக்தி<br>- விருந்தோம்பல் | 1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br><br>4 | <br><br><br><br><br><br><br>8 |

| | | | |
|---|---|---|---|
| | - கருத்துக்கோவை<br>- வெளியீட்டுத்திறன்<br>- மொழிநடை<br>• தற்கால இலக்கியங்கள்<br>- மூடநம்பிக்கை எதிர்ப்பு<br>- ஊழல்<br>- கையூட்டு எதிர்ப்பு<br>- அறிவியல் கண்ணோட்டம்<br>- புதுமை நாட்டம்<br>- முதலியவை | <br><br><br>4 | <br><br><br><br><br><br><br><br><br><br>8 |
| 28 | • எட்டு வினாக்கள்<br>• வடிவம்<br>• கருத்துத் தெளிவு<br>• நோக்கம்<br>• நிரல்படுத்தும் திறன்<br>அல்லது<br>• இயற்கை எவ்வெவ்வாறு சீரழிக்கப்படுகின்றன<br>• இயற்கைச் சீரழிவால் ஏற்படும் தீமைகள்<br>• இயற்கைப் பேரிடர்கள்<br>• இயற்கையைப் பாதுகாப்பதன் தேவை<br>• வடிவம்<br>• கருத்துக்கோவை<br>• மொழிநடை<br>• தீர்வு | 4<br>1<br>1<br>1<br>1<br><br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1 | <br><br><br><br>8<br><br><br><br><br><br><br><br><br>8 |

# மாதிரி வினாத்தாள் (MODEL QUESTION PAPER)

# பகுதி II - பொதுத் தமிழ் (PART II - TAMIL)

| | | | |
|---|---|---|---|
| வகுப்பு | : XI | மதிப்பெண் | : 80 |
| பதிவு எண் | : | நேரம் | : 2 ½ மணி |
| பெயர் | : | சிந்தனை நேரம் | : 1/4 மணி |

## General Instructions to Candidates

1. There is a 'Cool off time' of 15 minutes in addition to the writing time 2½ hrs.
2. You are neither allowed to write your answers nor to discuss anything with others during the 'Cool off time'.
3. Use the 'Cool off time' to get familiar with questions and to plan your answers.
4. Read questions carefully before answering.
5. All questions are compulsory and only internal choice is allowed.

## பொது வழிமுறைகள்

1. விடை எழுதத் தந்துள்ள 2½ மணி நேரத்திற்கு மேலாகத் தொடக்கத்தில் 15 நிமிடங்கள் சிந்தனை நேரமாகத் (Cool off time) தரப்பட்டுள்ளது. இந்நேரத்தில் விடை எழுதவோ விவாதிக்கவோ கூடாது.
2. இந்நேரத்தை வினாக்களைப் படித்துப் புரிந்துகொள்ளவும் விடையைத் திட்டமிடவும் பயன்படுத்த வேண்டும்.
3. விடை எழுதும் முன்பு வினாக்களைக் கவனமாகப் படிக்கவும்.
4. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதவேண்டும்.
5. சில வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி விடை எழுதுக.

## 1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளை தேர்ந்தெடுத்து எழுதுக

10 X 1 = 10

1. 'இம்மரம் வானளாவ உயர்ந்தது' என்பது

அ) கலை　　ஆ) பண்பாடு

இ) அறிவியல்　　ஈ) வானவியல்

2. பக்திக்கு இன்றியமையாத அடிப்படையாய் இருக்க வேண்டுவது

அ) நல்லறிவு　　ஆ) நல்லாற்றல்

இ) நல்லொழுக்கம்　　ஈ) நல்லாய்வு

3. இது பெயரெச்சமாகும்

அ) பறந்து　　ஆ) பறந்த

இ) பறவாது　　ஈ) பறந்தது

4. தமிழில் 'நவீனத்துவகத்தின் குழந்தை' என்று போற்றப்படுவது

அ) சிறுகதை　　ஆ) தெருநாடகம்

இ) விடுகதை　　ஈ) புதுக்கவிதை

5. ஆடுபாம்பு என்பது

அ) பண்புத்தொகை　　ஆ) வேற்றுமைத்தொகை

இ) உவமைத்தொகை　　ஈ) வினைத்தொகை

6. 'பச்சை தேவதை' என்னும் கவிதை நூலைப் படைத்தவர்

அ) சல்மா　　ஆ) திலக பாமா

இ) வெண்ணிலா　　ஈ) தமிழச்சி

7. இயற்கையின் ஒவ்வொரு பொருளிலும் சக்தியும் சிவமும் இணைந்து நிற்பதாகக் கண்டவர்

அ) மாணிக்கவாசகர்　　ஆ) திருஞானசம்பந்தர்

இ) திருநாவுக்கரசர்　　ஈ) சுந்தரர்

8. நக்கீரர் எழுதிய நூல்

அ) திருமுருகாற்றுப்படை　　ஆ) பெரும்பாணாற்றுப்படை

இ) சிறுபாணாற்றுப்படை　　ஈ) பொருநராற்றுப்படை

9. இதைப் பாடுவதில் கம்பனுக்கு இணையாவோர் வேறுயாரும் இல்லை என்பர்.

அ) கல்வி　　ஆ) வீரம்

இ) வளம்　　ஈ) களம்

10. 'தாயின் அருகில் அமர்ந்திருக்கும் சேய்' இத்தொடரில் 'சேய்' என்பது

அ) இந்தியா　　ஆ) வங்காளதேசம்

இ) பாகிஸ்தான்　　ஈ) இலங்கை

## 11 முதல் 14 வரையுள்ளவற்றைச் சரியாகப் பொருத்துக

4 X 1 = 4

11. ஜெயகாந்தன் - இதயம் பேசுகிறது

12. ஏ. கே.செட்டியார் - சோவியத் மக்களோடு

13. மணியன் - போனதும் வந்ததும்

14. நெ. து. சுந்தரவடிவேலு - மலேயா முதல் கனடா வரை

## 15 முதல் 18 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று கருத்துகள் அமையும்படி விடை எழுதுக

4 X 3 = 12

15. தெருக்கூத்தில் நடிகருக்கும் பார்வையாளருக்கும் உள்ள உறவை ஒரு குறிப்புரையாகத் தருக.

16. 'Fine Arts' என்பதற்கு நுண்கலைகள் என்பதைவிட கவின்கலைகள் என்னும் தமிழாக்கமே சிறப்பாக இருக்கிறது என்பதற்கு விளக்கவுரை எழுதுக.

17. ‘தலித் இலக்கியம் என்பது சமூக நீதி கோரும் இலக்கியம்’ என்பதை நிறுவுக.

18. “பண்டைத் தமிழர்களது வாழ்வு இயற்கையோடு நெருங்கிய தொடர்புடையதாக இருந்தது” - இக்கூற்றை மதிப்பீடு செய்க.

## 19 முதல் 23 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு கருத்துகள் அமையும்படி விடை எழுதுக.

5 X 4 = 20

19. ‘போர்க்குறிக் காயமே புகழின் காயம் யார்க்கது வாய்க்கும் ஆ! ஆ! நோக்குமின்! என்னும் செய்யுள் அடிகளுக்கு இரசனைக் குறிப்புத் தருக.

20. ‘பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே’ என்னும் நன்னூல் நூற்பாக் கருத்தை நவீனத்துவத்தின் அடிப்படையில் நிறுவுக.

21. புனைவியல் கோட்பாட்டின் அடிப்படைக் கூறுகளை ஆய்க.

22. ‘மனிதர்கள் தமக்குத் தாமே ஏற்படுத்திக்கொண்ட கேடுதான் நீலகிரியில் நேர்ந்த சோகம்’ என்பதற்கான காரணங்களை நிலைநாட்டுக.

23. ‘அனுபவங்களே மிகச் சிறந்த ஆசிரியன்’ என்பதை உங்கள் வாழ்வில் ஏற்பட்ட ஏதேனும் அனுபவத்தை அடிப்படையாகக்கொண்டு விளக்குக.

## 24, 25 வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் ஐந்து கருத்துகள் அமையும்படி விடை எழுதுக

2 X 5 = 10

24. நகை, அவலம், வீரம், பக்தி, ஆகிய நான்கு சுவைகளையும் எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

25. தண்ணீர் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்று என்பதை உணர்ந்து, நதிநீர் இணைப்பை வலியுறுத்திப் பத்திரிகைக்கான தலையங்கம் ஒன்று தயார் செய்க.

## 26 முதல் 28 வரையிலான வினாக்களுக்கு, இரு பக்கங்களுக்குக் குறையாமல் கட்டுரை வடிவில் விடை தருக.

3 X 8 = 24

26. கேரள - தமிழகக் கலைகளை ஒப்பிட்டு, ஒரு சிற்றிதழில் வெளியிடுவதற்கான ஒப்பீட்டுக் கட்டுரை எழுதுக.

அல்லது

பண்பாட்டுத் துறை சார்பாக நடைபெறவிருக்கும் நிகழ்ச்சியில் பங்குபெற்றுச் சொற்பொழிவாற்றுவதற்குப் ‘பண்பாட்டின் பிரதிபலிப்பே கலைகள்’ என்னும் தலைப்பில் ஒரு சொற்பொழிவு உரை தயாரிக்கவும்.

27. ‘நகைச்சுவைகள் வாழ்வில் இன்பம் பயக்கின்றன! பயக்கவில்லை!’ என்னும் பட்டிமன்றத்தில், நீங்கள் எவ்வணியில் பேச விழைகிறீர்கள்? காரணங்களைக் குறிப்பிட்டு ஒரு பட்டிமன்றக் குறிப்புத் தயாரிக்க.

அல்லது

‘மருமக்கள் வழி மான்மியம்’ பாடப்பகுதியில் சுட்டிக்காட்டப்படுகின்ற சமூகச் சீர்கேடுகளைத் திறனாய்வு செய்க.

28. வனத்துறை நடத்துகின்ற கருத்தரங்கில் பங்குபெற்று, ‘வனப்பாதுகாப்பு’ என்றும் தலைப்பில் பேசுவதற்கான கருத்துகளைத் தொகுத்துரைக்க.

அல்லது

‘புனலும் மணலும்’ கதையை வாசித்து வர்ணனைக் கூறுகளை அறிந்திருப்பீர்கள். நீங்கள் பார்த்த ஒரு கலை நிகழ்ச்சியை வர்ணனை செய்க.

# பொதுத்தமிழ் - மாதிரிவினாத்தாள் - II
# மதிப்பீட்டுக் குறிப்புகள்

| வினா என் | விடைக் குறிப்புகள் | மதிப் பெண் | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | அ. கலை | 1 | 1 |
| 2 | இ. நல்லொழுக்கம் | 1 | 1 |
| 3 | ஆ. பறந்த | 1 | 1 |
| 4 | ஈ. புதுக்கவிதை | 1 | 1 |
| 5 | ஈ. வினைத்தொகை | 1 | 1 |
| 6 | அ. சல்மா | 1 | 1 |
| 7 | அ. மாணிக்கவாசர் | 1 | 1 |
| 8 | அ. திருமுருகாற்றுப்படை | 1 | 1 |
| 9 | இ. வளம் | 1 | 1 |
| 10 | ஈ. இலங்கை | 1 | 1 |
| 11 | ஜெயகாந்தன் - போனதும் வந்ததும் | 1 | 1 |
| 12 | ஏ. கே. செட்டியார் - மலேயா முதல் கனடா வரை | 1 | 1 |
| 13 | மணியன் - இதயம் பேசுகிறது | 1 | 1 |
| 14 | நெ. து. சுந்தரவடிவேலு- சோவியத் மக்களோடு | 1 | 1 |
| 15 | • பார்வையார்கள் குறுக்கீடு செய்தால் நிகழ்ச்சியை நிறுத்துதல்<br>• ஏதேனும் விடுபட்டால் கேள்வி கேட்டல்<br>• பார்வையாளர்கள் இடத்திற்குக் கலைஞரும் கலைஞர் இடத்திற்குப் பார்வையாளரும் வருதல் | 1<br>1<br>1 | 3 |
| 16 | • Fine என்ற ஆங்கிலச்சொல் அழகையும் தூய்மையையும் மட்டும் குறிக்கும்<br>• அது நுட்பத்தைக் குறிக்காது<br>• Fine arts - இல் நுட்பமான பாட்டு, இசை, சிற்பம், ஓவியம் இவை அடங்கும் எனவே நுண்கலை என்பதைவிட கவின்கலைகள் என்பதே சிறப்பாக இருக்கும் | 1<br>1<br>1 | 3 |
| 17 | • தலித் இலக்கியங்கள் சமூக ஏற்றத்தாழ்வுகளைச் சுட்டிக்காட்டுகிறது<br>• அவற்றிற்கு எதிராக எதிர்ப்புக்குரல் எழுப்புகிறது<br>• பாதிகப்பட்டவர்களைப் போராடத் தூண்டுகிறது | 1<br>1<br>1 | 3 |
| 18 | • இயற்கை வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடையது<br>• மக்களின் வாழ்க்கைப்பகுதிகள் இயற்கை அடிப்படியில் எழுந்தவை<br>• இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன | 1<br>1<br>1 | 3 |
| 19 | • போரில் ஏற்படும் காயம் காயமல்ல. அது புகழின் அடையாளம்<br>• போர் செய்யும் வாய்ப்பு எல்லோர்க்கும் கிடைப்பதில்லை<br>• நாட்டுக்காக போர் செய்வதே ஆண்மகனின் தலையாய கடமை<br>• நாட்டுப்பற்றை ஊக்குவிப்பதாக இச்செய்யுள் அமைகிறது | 1<br>1<br>1<br>1 | 4 |
| 20 | • மரபிலக்கியங்களின் வடிவ அமைப்பு மாறுகின்றது<br>• மரபு உவமைகள் முதலானவை மாற்றப்பட்டு படிமம், குறியீடு போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன<br>• நேர்க்கூற்று மொழிநடை மாறுகிறது<br>• உள்ளடக்கத்திலும் நவீன இலக்கியங்கள் புதுமையைக் கையாளுகின்றன | 1<br>1<br>1<br>1 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 21 | • உணர்தல், கற்பனை, அனுபவம், ஏக்கம்<br>• தனிமனிதன் என்பவன் பகுத்தறிவுக்கு உட்படாதவன்<br>• உணர்ச்சிப் பிழம்பால் ஆனவன்<br>• இயற்கையை ஆராதிப்பவன் | 1<br>1<br>1<br>1 | <br><br><br>4 |
| 22 | • மனிதப் பேராசையின் விளைவு<br>• புவிவெப்பம் அதிகமானது/ சுற்றுச்சூழல் சீர்கேடு<br>• முன்னெச்சரிக்கை நடவடிக்கை இல்லாதது<br>• வடிகால்களை மறித்துக் கட்டடம் கட்டியுள்ளமை | 1<br>1<br>1<br>1 | <br><br><br>4 |
| 23 | • கண்டு, கேட்டு, அறிவதைவிடப் பட்டபின்பே நாம் திருந்துகிறோம்<br>• கருத்துகளை அடுக்கும்திறன்<br>• வெளியீட்டு உத்தி<br>• சிந்தனைத் திறன் | 1<br>1<br>1<br>1 | <br><br><br>4 |
| 24 | • சுவைகளின் விளக்கம்<br>• எடுத்துக்காட்டுகளுடன் சுவைகளை விளக்கிக் கூறுதல்<br>• மேற்கோள்கள்<br>• கருத்துக்கோவை<br>• வடிவம் | 1<br>1<br>1<br>1<br>1 | <br><br><br><br>5 |
| 25 | • கருத்து<br>- உபரிநீர் கடலில் கலத்தல்<br>- சில மாநிலங்களின் நதிகளில் எல்லா காலங்களிலும் நீரோட்டம் காணுதல்<br>- அதிகம் வரும் தண்ணீரை முறைப்படுத்தி வேறு ஆறுகளுடன் இணைத்தல்<br>• தீர்வு<br>- தண்ணீரைப் பங்கீடு செய்தல்<br>• வடிவம் | 3<br><br><br><br>1<br><br>1 | <br><br><br><br><br><br>5 |
| 26 | • கேரளக்கலைகள்<br>• தமிழகக்கலைகள்<br>• ஒப்பீடு<br>- நிகழ்த்துமுறை<br>- ஆடை, அணிகலன்கள்<br>- இசை<br>- நிகழ்விடம்<br>• வெளியீட்டுத்திறன்<br>• மொழிநடை<br>அல்லது<br>• பண்பாடு - விளக்கம்<br>• கலைகளின் தோற்றம்<br>• கலைகள் உருவாவதற்கான பின்புலம்<br>• கலை - பண்பாட்டை பொருத்திக் காட்டுதல்<br>• வடிவம்<br>• கருத்துக் கோவை<br>• வெளியீட்டுத்திறன்<br>• மொழிநடை | 1<br>1<br>4<br><br><br><br><br>1<br>1<br><br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1 | <br><br><br><br><br><br><br><br>8<br><br><br><br><br><br><br><br><br>8 |
| 27 | • பேச விழையும் தலைப்பு<br>• நகைச்சுவை வாழ்வில் இன்பம் பயக்கின்றது!<br>- கவலையை மறக்கடச் செய்கிறது<br>- சிரிக்க வைக்கிறது<br>- சிந்திக்க வைக்கிறது<br>- மனதை ஒருமுகப்படுத்துகிறது<br>- சொல்லாற்றலை வளர்க்கிறது<br>• மொழிநடை<br>• வெளியிடும் திறன்<br>• பேச்சாற்றல்<br>• தொகுத்துக் கூறல் | <br>4 | |

| | | | |
|---|---|---|---|
| | • நகைச்சுவை வாழ்வில் இன்பம் பயக்கவில்லை ! | 4 | |
| | - நேரத்தை வீணடிக்கிறது | | |
| | - இரட்டைப் பொருள் தரும் சொற்கள் | | |
| | - மொழிநடை (கொச்சைமொழி, பிறமொழிக்கலப்பு) | | |
| | - தேவையற்ற சொற்கள் | | |
| | • மொழிநடை | | |
| | • வெளியீட்டுத் திறன் | | |
| | • பேச்சாற்றல் | | |
| | • தொகுத்துக் கூறல் | | 8 |
| | அல்லது | | |
| | • ஊழல் (தொழில், உற்பத்தி) | 1 | |
| | • கையூட்டு (வேலை, அன்றாட நடைமுறை) | 1 | |
| | • ஏமாற்றுதல்/ஏமாறுதல் | 1 | |
| | • தெய்வ நம்பிக்கையின்மை | 1 | |
| | • உழைப்பில் நம்பிக்கையின்மை | 1 | |
| | • விமர்சிக்கும் திறன் | 1 | |
| | • கருத்துக்கோவை | 1 | |
| | • மொழிநடை | 1 | 8 |
| 28 | • விலங்குகள், பறவைகள் அழிப்பு | 1 | |
| | • கல்லுடைப்பு/ மலைகள் உடைத்தல் | 1 | |
| | • மரங்கள் வெட்டுதல்/அருவிகள் சீரழிப்பு | 1 | |
| | • மண் அரிப்பு/ மணல் எடுத்தல் | 1 | |
| | • இயற்கையின் சதி (நிலச்சரிவு, பாறை நகர்வு, பூகம்பம், சுனாமி) | 1 | |
| | • கருத்துக்கோவை | 1 | |
| | • கருத்துத்தெளிவு | 1 | |
| | • நடைச்சிறப்பு | 1 | 8 |
| | அல்லது | | |
| | • ஒரு கலை நிகழ்ச்சி | 1 | |
| | • கற்பனைத்திறம் | 1 | |
| | • கருத்துத்தெளிவு | 1 | |
| | • வர்ணனைத்திறம் | 1 | |
| | • அணிநயம் | 1 | |
| | • மொழிநடையழகு | 1 | |
| | • பொருள் ஆழம் | 1 | |
| | • உவமை, உருவகம், சொல்லாட்சி | 1 | 8 |